செய்தி வெளியீடு எண். 20-2016 நாள்: 08.11.2016

விழுப்புரம் மாவட்டம் சிறுபான்மையின மாணவ/ மாணவியர்களுக்கு பள்ளி கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்க கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.

*****

தமிழ் நாட்டில் உள்ள அரசு/அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் வகுப்பைச் சார்ந்த மாணவ/ மாணவியர்களுக்கு பள்ளி படிப்பு (**Prematric)**/பள்ளி மேற்படிப்பு (**Post matric)** திட்டத்தின் கீழ் ***2016-2017-ஆம்*** கல்வி ஆண்டிற்கு கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

1 முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்கள் பள்ளி படிப்பு (**Prematric)** புதியது மற்றும் புதுப்பித்தல் (**Fresh/Renewal)** மற்றும் 11, 12-ஆம் வகுப்பு கல்வி பயிலும் மாணவ/மாணவியர்கள் பள்ளி மேற்படிப்பு (**Post matric)** புதியது மற்றும் புதுப்பித்தல் (**Fresh/Renewal)** கல்வி உதவித் தொகை பெறுவதற்கு **Online** மூலம் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டிய காலக்கெடு ***31.10.2016*** அன்றுடன் காலக்கெடு முடிவடைந்தது. தற்போது இக்காலக்கெடு ***30.11.2016*** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையின மாணவ/மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரியகாலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.